**13.11.2024 CC.No.22/2016** பெயர். **திரு.மாரிமுத்து PW**1

1வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2வது எதிரி. சிறப்பு வழக்கறிஞர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி மனுவில் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

அ.த.சா.ஆ.1 பார்வை மகஜரை நான் எழுதவில்லை. என்னுடன் கையெழுத்து செய்த ராஜாங்கம் என்பவர் எழுதினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. பார்வை மகஜரில் உள்ள எழுத்துக்களை பார்த்தால் யார் எழுதினார்கள் என்று சொல்ல முடியும். மேற்படி பார்வை மகஜரை சாட்சி பார்த்துவிட்டு அதில் ராஜாங்கம் எழுதவில்லை என்று சொல்லுகிறார். பார்வை மகஜரில் NIB-CID காவல் நிலைய கு.எண். சட்டப்பிரிவுகள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நேரத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் புலன்விசாரணை அதிகாரியிடம் தான் கேட்க வேண்டும். எனக்கு தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரித்தபோது சம்பவ இடத்திற்கு காவல் நிலையத்தில் இருந்து எந்த வாகனத்தில் பதிவு எண்ணில் சென்றோம் என்ற விவரத்தினை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலம், சோதனை சம்மத கடிதம், ஆகியவற்றில் நானும், சாட்சி ராஜாங்கமும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை கணினியில் தட்டச்சு செய்தது நான்தான். அதில் நான் தட்டச்சு செய்ததாக எதுவும் குறிப்பு எழுதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான், என்னுடைய வாக்குமூலத்தில் தட்டச்சு செய்தது பற்றி கூறியுள்ளேன். இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களிலும் 5 மற்றும் 6வது வரியில் ராமநாதபுரம் NIB-CID காவல் நிலைய கு.எண். 81/2015 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)© NDPS Act என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் ஒவ்வொரு எதிரிகளுக்கும் தனித்தனியாக தயார் செய்து தனித்தனியாக கையொப்பம் பெறப்படவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. ஆய்வாளரிடம் கேட்க வேண்டும். ஒப்புதல் வாக்குமூலத்தை கெஸ்ட் ஹவுசில் வைத்து அங்குள்ள மின்சாரத்தை பயன்படுத்தி பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது. கெஸ்ட் ஹவுசில் நாங்கள் சென்றபோது அங்கு யாரும் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை நான் கணினியில் தட்டச்சு செய்ததாக ஆய்வாளர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னதை ஆய்வாளர் வாக்குமூலத்தில் பதிவு செய்யாமல் உள்ளார். என்னுடைய வாக்குமூலம் காப்பியை என்னிடம் கொடுத்தார்கள். அதில் கெஸ்ட் ஹவுசில் வைத்து அங்குள்ள மின்சாரத்தை பயன்படுத்தி பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான்

சொன்னதை ஆய்வாளர் வாக்குமூலத்தில் பதிவு செய்யவில்லை. ஆய்வாளர் 161(1) வாக்கு மூலத்தை என் முன்னிலையில் பதிவு செய்தார். அதை நான்தான் தட்டச்சு செய்தேன். எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்று என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த வகையான தராசு எடுத்து சென்றார்கள் என்ற விவரத்தினை என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், சொன்னேன் ஆனால் ஆய்வாளர் பதிவு செய்யவில்லை. என்ன வகையான தராசு சம்பவ இடத்திற்கு கொண்டு சென்றோம் என்றால் வில் தராசு. அதில் எத்தனை கிலோ வரை எடை போடலாம் என்பதை வைத்து பார்த்தால் தெரியும். எத்தனை முறை எடை போட்டோம் என்று விவரத்தினை என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது அதற்கு எனக்கும் சம்பந்தமில்லை. நான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கணிங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்ற விவரம் வாகனத்தின் லாக்புக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த லாக்புக்கை ஆய்வாளரின் விசாரணையின் போது ஒப்படைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.